சிறப்பிதழ்
**Special Issue**

20 மாசி 2052
04th March 2021

ISSN : 2321 - 984X

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

Journal of

# Modern Thamizh Research

(A Quarterly International Multilateral Thamizh Journal)
Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2021
தமிழ்த்துறை,
ந.க.ம. கல்லூரி,
பொள்ளாச்சி, தமிழ்நாடு, இந்தியா

## தமிழ் இலக்கியத்தில் ஆளுமை

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் ம. சித்ரகலா**
உதவிப்பேராசிரியர்

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

13 பகுதி-2 Part -2

| | | | |
|---|---|---|---|
| 55. | வ.மோகனப்பிரியா | சிவனும் சக்தியும் - தேவாங்க புராணம் சார்ந்து சில குறிப்புகள் | 240-242 |
| 56. | ப.லெட்சுமி | அடியார்க்குநல்லாரின் படைப்பாளுமை | 243-245 |
| 57. | மு.ரா. சித்ரா தேவி | அகநானூற்றில் தோழியின் ஆளுமை | 246-249 |
| 58. | மு.கவிதாதேவி | திருக்குறள் கூறும் நீர்மேலாண்மையில் அறிவியல் ஆளுமை | 250-254 |
| 59. | செ.சண்முகவடிவு<br>சு.பிரசாத் | திருக்குறளில் தனிமனித ஆளுமை மேம்பாடு | 255-260 |
| 60. | க. கோமதி | செவ்வியல் இலக்கியங்களில் மனிதமேம்பாடு | 261-265 |
| 61. | T. ராதிகா | கவிஞர் தமிழ்க்குழவி படைப்புகளில் ஆளுமை திறன் | 266-268 |
| 62. | இரா.விஷ்ணுப்பிரியா | தனிமனித வெற்றிக்கு வள்ளுவரின் ஆளுமைக்கூறுகள் | 269-273 |
| 63. | க. ராஜ்குமார் | நெடுநல்வாடையில் ஆளுமையும் ஆளுமை சிதைவும் | 274-277 |
| 64. | வெ.முருகேஸ்வரி | சூல் புதினத்தில் ஆளுமை குறித்த பதிவுகள் | 278-281 |
| 65. | க.தனலட்சுமி | விழுமியங்களும் ஆளுமைகளும் | 282-286 |
| 66. | அ.நித்யா | பாலைத்திணைப் பாடல்களில் தோழியின் ஆளுமைத்திறன் | 287-290 |
| 67. | கா. திருநாவுக்கரசு<br>செ.விஸ்வநாதன் | திருக்குறள் நெறியில் ஆளுமைத்திறன் மேம்பாடு | 291-295 |
| 68. | செ. மாணிக்கராஜ்<br>இரா. பிரான்சிஸ் சேவியர் | முல்லைப்பாட்டில் புதைந்துள்ள தனி மனித ஆளுமைகள் | 296-299 |
| 69. | ரா.பிறாக்ஸி | திருக்குறளில் மனித ஆளுமை | 300-304 |
| 70. | மு. மகாலெட்சுமி | சொரிமுத்தைய்யனார் கோவில் வரலாறும் மனித ஆளுமையும் | 305-308 |
| 71. | சு.இராமதிலகம் | இறையன்புவின் படைப்பாளுமை | 309-312 |
| 72. | பெ.தவசி | திருக்குறள் உணர்த்தும் ஆளுமை | 313-316 |
| 73. | எம்.மெஹ்முதா | விருந்தோம்பலில் அன்பின் ஆளுமை | 317-319 |
| 74. | த.பத்மா | அம்பை சிறுகதையில் பெண்ணின் ஆளுமை | 320-324 |
| 75. | க.ஷகிலாலோகநாயகி | திருமூலரின் இலக்கியத்தில் மனிதனின் ஆளுமை | 325-328 |
| 76. | ந. பிரகாஷ் | கொங்கு நாட்டு வள்ளல்கள் | 329-334 |
| 77. | அமுதா அன்பழகன் | புலம்பெயர்நாட்டுத் தமிழ் மொழிக் கல்வியில் பாரதியார் பாடல்கள் | 335-340 |
| 78. | கி.நாகரத்தினம் | அறநூல்கள் வழிநடப்பில்நெறிப்படுத்துவதன் இன்றியமையாமை | 341-345 |
| 79. | பா.பேபி ஷாலினி | கம்பராமாயணத்தில் குகனின் ஆளுமை | 346-350 |
| 80. | சு.பரணி | கற்றாழை நாவலில் மணிமேகலையின் ஆளுமை | 351-356 |
| 81. | ம.கீதா | தமிழ் இலக்கியத்தில் மனிதநேயம் | 357-360 |
| 82. | செ. செல்லபாண்டி | கொ.மா.கோதண்டம் நாவலில் குறிஞ்சித்தேன் பூ நாவல் பெண்ணிய ஆளுமை | 361-363 |
| 83. | கா.கவிதா | புலம்பெயர் நாவலில் ஆளுமைப் பண்புகள் | 364-367 |
| 84. | ர. பாலதாரணி<br>க.தனலட்சுமி | ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில் கருத்தாளுமை | 368-373 |
| 85. | ஆ.சந்திரசேகர் | தாழ் உடைத்து(அ)லட்சியமாக நடக்கும் நதி | 374-377 |
| 86. | பா.அருள்ஜோதி | சுந்தரர் பாடல்களில் ஆளுமை | 378-382 |
| 87. | குமாரசாமி தயாளினி | முத்தமிழ் ஆளுமை பிரம்மஸ்ரீ மா.த.ந வீரமணிஐயர் | 383-386 |
| 88. | க.சுந்தரமூர்த்தி | கம்பனின் படைப்பாளுமை | 387-389 |
| 89. | த. பரமேஸ்வரி | நாலடியார் நவிலும் வாழ்வியல் ஆளுமைகள் | 390-394 |
| 90. | உ.மணிமேகலை | மலைபடுகடாமில் ஆளுமை | 395-397 |
| 91. | இரா.சங்கீதா | கம்பராமாயணத்தில் திருக்குறளின் ஆளுமை | 398-402 |
| 92. | ம.இராஜகோபால் | தமிழ்மகன் புதினங்களில் ஆளுமைக் கூறுகள் | 403-407 |
| 93. | ரா.சிவக்குமார்<br>C.விஸ்வநாதன் | வேதாத்திரியத்தில் ஆளுமைத்திறன் | 408-410 |
| 94. | ப.கார்த்திக் | திருமூலரின் நெறி ஆளுமை | 411-413 |
| 95. | மு.சுகந்தி | உயிர் எழுத்து இதழின் - ஆளுமை வெளிப்பாடும்<br>படைப்பாளர்களுக்கான ஆளுமை சுதந்திரமும் | 414-419 |
| 96. | இரா.ஜெயந்தி | சங்க இலக்கியத்தில் முருக வழிபாட்டின் ஆளுமை | 420-424 |
| 97. | பா. விக்னேஷ்குமார் | பாரதியாரின் ஆளுமை | 425-427 |
| 98. | R. எழில்ராமன் | நாட்டுபுற இசை மரபில் வாழ்வியல் மாற்றங்கள் | 428-430 |
| 99. | பொ. பிரியா | அம்ருதா இதழ்ச் சிறுகதைகளில் காணலாகும் உத்திகள் | 431-435 |
| 100. | ப.பத்மா<br>காசிபட்டா சத்தியமூர்த்தி | ஆண்டாளின் பக்தி ஆளுமை | 436-442 |
| 101. | கா. மகேசுவரி | தமிழ் இலக்கியங்களில் பெண்பாற் புலவர்களின் ஆளுமை திறன் | 443-445 |
| 102. | கோ. சரண்யா | கவிஞர் மீராவின் படைப்பாளுமை | 446-447 |
| 103. | து. யோககலைவாணி | பிரபஞ்சனின் சிறுகதைகளில் படைப்பாளுமை | 488-451 |
| 104. | த. திலகவதி | சாருநிவேதிதாவின் ஸீரோ டிகிரி நாவலின் அவந்திகாவின் ஆளுமை | 452-455 |
| 105. | ம.காயத்ரி | அகநானூற்று மருதத்திணைப் பாடல்களில் ஆளுமை வெளிபாடு | 456-458 |
| 106. | கி. புவனேஸ்வரி | வாயிலில் தோழியின் ஆளுமை | 459-462 |
| 107. | ஆ. ஜோதி | ஐங்குறுநூற்றில் தோழியின் ஆளுமைப்பண்பு | 463-466 |
| 108. | ம. சித்ரகலா | கம்பனின் படைப்பாளுமையில் வீடணனின் பண்பாளுமை | 467-471 |


Published by : Raja Publications, No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023. Tamil Nadu. India. Mobile : 9600535241
Printed : The Printing House, Tiruchirappalli - 620 023. Tamil Nadu. India. Ph : +91 - 431 2420121

# நாலடியார் நவிலும் வாழ்வியல் ஆளுமைகள்

**முனைவர் த. பரமேஸ்வரி**
இணைப்பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதி),
ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி.

### ஆய்வுச் சுருக்கம்

நாலடியார் நவிலும் வாழ்வியல் ஆளுமைகள் என்ற தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையில் முன்னுரை, சொல்லும் கருத்தாக்கமும், ஆளுமையின் கூறுகளான சீராக இருத்தல், உளவியல், உடலியல் சார்ந்து அமைதல், நடத்தைகளையும் செயல்களையும் பாதித்தல் பன்முகவெளிப்பாடு, ஒழுக்கம், கல்வி, முயற்சி, நட்பு, அடக்கம், ஈகை, விருந்தோம்பல், தந்தையின் ஆளுமை, அறவினை ஆளுமை, பிறர்மனை நயவாமை போன்ற துணைத் தலைப்புகளில் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது. கட்டுரையின் நிறைவாக தொகுப்புரை வழங்கப்பட்டுள்ளது.

### முன்னுரை

ஆளுமை குறித்த அறுதியான எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரையறை இல்லை. உளவியல் நோக்கில் ஆளுமை என்பது ஒருவரின் ஒழுங்கமைந்த இயங்கியல் பண்புகளும் அவைத் தோற்றுவிக்கும் தோரண நடத்தைகள், உணர்வுகள் சிந்தனைகள் போன்றவைகளைக் குறிக்கிறது.

பொது வழக்கில் ஆளுமை என்பது ஒருவரின் வெளித்தோற்றத்தைப் பெரிதும் குறிக்கிறது. ஆளுமை என்பதைச் சுருக்கமாக "ஒருவரைத் தனித்துவமானவராக ஆக்கும் எண்ணங்கள், உணர்வுகள் நடத்தைகள் என்பவற்றாலான ஒன்று" என வரையறுக்கலாம். அத்துடன் ஆளுமை ஒருவரின் உள்ளிருந்து உருவாகி அவருடைய வாழ்க்கைக் காலம் முழுவதும் சீராக அமைகின்றது.

### சொல்லும் கருத்தாக்கமும்

ஆளுமை என்னும் தமிழ்ச்சொல் "பர்சனாலிட்டி" (Personality) என்னும் ஆங்கிலச்சொல் குறிக்கும் கருத்துருவைக் குறிக்க ஏற்பட்டது. இலத்தீன் மொழியில் பர்சனா (persona) என்பது 'மறைப்பு', 'முகமூடி' என்னும் பொருள் தருவது. எனவே ஆளுமை என்பது ஒருவர் அணிந்திருக்கும் முகமூடி" என்னும் கருத்துருவின் அடிப்படையைக் கொண்டுள்ளது. (https:// ta.M.Wikipedia /org/v:)

### சீராக இருத்தல்

தனியாட்களின் நடத்தையில் ஒழுங்கும் சீர்த்தன்மையும் காணப்படுகின்றது. குறிப்பாகப் பல்வேறு நிலைமைகளில் ஒரே மாதிரியாகவே ஒருவர் செயல்படுவதும் தெரிகிறது.

### உளவியல், உடலியல் சார்ந்து அமைதல்

ஆளுமை என்பது ஒரு உளவியல் உருவாக்கம் ஆகும். எனினும் உடலியல் செயல்முறைகள் தேவைகள் என்பவையும் இதைப் பாதிப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன.

### நடத்தைகளையும் செயல்களையும் பாதித்தல்

ஆளுமை என்பது ஒருவர் எவ்வாறு நிழனுக்கு ஏற்ப நடந்துகொள்கிறார் என்பது மட்டுமின்றி, ஒரு குறிப்பிட்ட முறையில் அவர் நடந்து கொள்வதற்கும் காரணமாக அமைகின்றது.

### பன்முக வெளிப்பாடு

ஆளுமை என்பது ஒருவருடைய நடத்தை மூலம் மட்டும் வெளிப்படுவதில்லை. அது அவருடைய எண்ணங்கள் உணர்வுகள்,

நெருக்கமான உறவுகள், பிற சமூகத் தொடர்பாடல்கள் போன்றவற்றிலும் வெளிப்படுகிறது.

மேற்கண்ட விளக்கங்களை இணையதளம் குறிப்பிடுவதை உற்றுநோக்கும் பொழுது. மனிதன் தன் ஆளுமையை மேம்படுத்தவும் ஆளுமையை விளக்கிக் கொள்ளவும் நமது தமிழ் இலக்கியங்கள் முன்னிலையாக விளங்குகின்றன.

**"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"**

என்பதற்கேற்ப உலக மக்கள் அனைவருமே நல்வாழ்வு வாழ ஏற்ற வழி முறைகளைத் தருவது நம் தமிழ் இலக்கியங்கள். "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்பார் ஔவையார். ஏனென்றால் மனிதனுக்கு மட்டுமே சிந்திக்கும் ஆற்றல் உள்ளது. மனிதப் பிறவியின் பயன்பாடே சிந்தித்துச் செயல்படுதல் ஆகும். அப்படி இல்லையெனில், அவன் வாழ்வு சீர்கேடான வாழ்வாக மாறிவிடும். எனவே, மனித சமுதாயத்தை நல்வழிப்படுத்துவதில் நம் அற இலக்கியங்களின் செயல் எண்ணற்கரியது.

நாலடியாரில் காணப்படும் வாழ்வியல் ஆளுமைகள் பற்றிக் கீழ்க்காணுமாறு காணலாம்.

### ஒழுக்கம்

ஒழுக்கம் உயிரைக் காட்டிலும் மேலானது என்பார் வள்ளுவர். ஒழுக்கமே ஒரு மனிதனுக்குப் புகழைத் தேடித் தருவதில் முதன்மை பெற்று விளங்குகிறது. அதையே நாலடியார் சிறந்த ஒழுக்கத்தோடு வாழ்பவர்களையே உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் என்கிறார். அந்தக் குடியில் பிறந்தவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை,

**"உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணுங்
குடிப்பிறப் பாளர்தங் கொள்கையிற் குன்றார்
இடுக்கண் தலைவந்துக் கண்ணும் அரிமா
கொடிப்புல் கறிக்குமோ மற்று".**

(பா. எண் 141)

இவ்வாறு எடுத்துரைத்து, ஒழுக்கத்தின் அவசியத்தை கூறியதுடன் ஒழுக்கமே மனிதனின் ஆளுமையை மேம்படுத்திக் கொள்வதில் தலையாயதாக விளங்குகிறது.

### கல்வி

'கற்கை நன்றே, கற்கை நன்றே. பிச்சைபுகினும் கற்கை நன்றே' இது கற்றலின் அவசியத்தைச் சொல்கிறது. நாலடியாரும் இதைக் கூறும் பொழுது, கல்வியே உலக இன்பத்தைத் தரும் என்றும், உலகத்திலும் கல்வியைப் போல றியாமையைப் போக்கும் மருந்தை யாம் இதுவரை காணவில்லை என்பதை,

**"இம்மை பயக்குமால் ஆயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மையுலகத்தும் யாங்காணோம் கல்விபோல
மம்மர் அறுக்கும் மருந்து".** (பா. எண் 132)

இங்ஙனம் கூறுகிறது. கல்வி கற்காதவர்களைக் கண்கள் இருந்தாலும் அவை புண்களே என வள்ளுவம் சாடுவதுடன்,

**"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குஞ்
தன் தேசமல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு**

(மூதுரை – 26)

என ஔவையாரும் பறைசாற்றுவதன்மூலம் கற்றல் தன்படி நிற்றலே வாழ்க்கைக்குச் சாலச் சிறந்தது எனும் ஆளுமையைத் தெளிவுறுத்துகிறது.

### முயற்சி

மனிதன் வாழ்க்கையில் உன்னதமான வெற்றியை அடைய முயற்சி மிக முக்கியம். தன்னுள் முடியாது என்று எழக்கூடிய எண்ணமே தமது வாழ்க்கையை முடக்குவதற்கான வழியைத் தேடித் தருவதாகும். எனவே, முயற்சியின்

தேவையைக் குறிப்பிடும் நாலடியார், அசையக் கூடிய கொம்புடைய இளமரமும், உறுதி வாய்ந்த பெரிய மரமாக வளர்ந்த பின்னர், ஆண் யானையைக் கட்டும் கட்டுத் தறியாகும். அதுபோல, தாழ்ந்த நிலையில் இல்லாமல் முயற்சி செய்தால், வாழ்வில் வெற்றியடையலாம் என்கிறது இந்த ஆளுமையை.

“ஆடுகோடாகி அதரிடை நின்றதூம்
காழ்கொண் கண்ணே களிறணைக்கும் கந்தாகும்
வாழ்தலும் அன்ன தகைத்தே ஒருவன்தான்
தாழ்வின்றித் தன்னைச் செயின்”.

(பா. எண் 192)

என்று நவில்கிறது.

நட்பு

'உன் நண்பனைக் கூறு? உன்னைப் பற்றி நான் சொல்கிறேன்' என்பதற்கிணங்க. ஒருவருடன் நட்புக் கொள்ளும் பொழுது அவருடைய குணநலன்களை ஆராய்ந்த பின்னரே நட்புக் கொள்ள வேண்டும். ஆராயாமல் நட்புக் கொண்டால், பழகியபின் பிரிதல் என்பது துன்பம் பிளைவிக்கக்கூடியதாகும் என்கிறது நாலடி நானூறு. அவை பின்வருமாறு,

“மரீஇப் பலரோடு பன்னாள் முயங்கிப்
பொரீஇய பொருள்தக்கார்க் கோடலே வேண்டும்
பரீஇ உயிர் செகுக்கும் பாம்பொடும் இன்னா
மரீஅப் பின்னைப் பிரிவு”. (பா. எண். 220)

இதையே வள்ளுவரும்,

“ஆராய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை நடைமுறை
தான் சாந் துயரந் தரும்”

எனக் கூறுகிறார். ஒரு மனிதனின் ஏற்றத்தாழ்வில் மிக முக்கிய அங்கம் விகக்கும் உறவு நட்பு. எனவே ஆளுமையை வளர்த்துக் கொள்வதில் மேற்கூறிய கருத்துக்களின் மூலம் நட்பு மிக முக்கிய அங்கம் வகிக்கின்றது என்பதைப் புரிய முடிகிறது.

அடக்கம்

நன்மை தீமைகளை அறிந்து, அடக்கமுடையவராய், பழி பாவங்களுக்கு அஞ்சி, செய்யக்கூடிய செயல்கள் உலகமே மகிழும்படி செய்து, நவழியில் கிடைத்த பொருள் கொண்டு மகிழ்ந்து, வாழ வேண்டு என்கிறது நாலடியார். இதை,

“அறிவது அறிந் தடங்கி அஞ்சுவது அஞ்சி
உறுவது உலகுவப்பச் செய் பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்பினார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது” (பா. எண். 74)

என்று கூறி 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்ற ஆளுமையை நமக்கு வலியுறுத்துகின்றது. இச்செய்தியை, “பெற்றது மகிழ்ந்து சுற்றம் ஓம்பாது உண்டு கூம்பாது வீசி” – என்னும் புறநானூற்று வரிகளுடன் ஒப்பிட்டும் நினைவுபடுத்தலாம்.

ஈகை

உலகத்திலேயே மிகக் கொடிய துன்பம் யாதெனில் பசியால் வாடுவது, இந்தத் துன்பத்தால் மக்கள் வாடுவதைக் கண்ட பாரதி,

“தனி யொருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்”

என்று சீறிப் பாய்ந்தார். அப்படிப்பட்ட பசியைப் போக்க வறியவர் துயர் கண்டு, இல்லை என்று சொல்லாமல் அவாக்கு உதவுவதே சிறந்த பண்பாகும். இதையே நாலடியார், ஆகைக்குணம் உடையவர்களுக்கு மட்டுமே மறுமையாகிய இன்பத்தைப் பெறுவார்கள் என்பதை,

“இல்லா இடத்தும் இயைந்த அளவினால்
உள்ள இடம்போல் பெரிதுவந்து – மெல்லக்
கொடையோடு பட்ட குணனுடைய மாந்தர்க்கு
அடையாவாம் ஆண்டைக் கதவு”

(பா. எண். 91)

என்று உரைக்கின்றது.

இக்கருத்தை ஒட்டியே 'செல்வத்துப்பயனே ஈதல்' என்ற புறநானூற்றுப் பாடல் வரிகளும் உள்ளது மேலும் இக்கருத்துக்கள்மூலம் ஈகைப் பண்பாளுமை தலையாய ஆளுமைப்பண்பாக மனிதர்களுக்கு விளங்க வேண்டும் என்பதை உணர்த்தி உலகில் சமரசம் ஓங்கச் செய்கிறது.

### விருந்தோம்பல்

'இல்லறமே நல்லறமாகும்' இல்லறம் தழைத்தோங்க வேண்டுமானால், நல்ல மனைவியைப் பெற்றிருக்க வேண்டும். அப்படி இருந்தாலதான், நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகமாக உருவாகும். இதை நாலடியார். மாட்சிமையுடைய மனைவியைப் பெறாதவனுடைய இல்லம் பயனுடையது ஆகாது. அது சுடுகாடே என்கிறது, காரணம், விருந்தோம்பல் ஆளுமை என்பதே மனைவியின் சிறந்த ஆளுமைகளுள் தலையாயதும், தலை சிறந்ததும் ஆகும். இதனை,

> **"மழைதிளைக்கும் மாடாய் மாண்பமைந்த காப்பாய்**
> **இழைவிளக்கு நின்றியமைப்பின் என்னாம்? விழைதக்க**
> **மாண்ட மனையாளை யில்லாதான் இல்லகம்**
> **காண்டற்கு அரியதோர் காடு"** (பா. எண் 361)

என்கிறது நாலடியார். மேலும், இல்லத்தலைவிக்கு விருந்தோம்பும் ஆளுமைப் பண்பு அவசியம் என்பதை, வறுமையில் இருந்தாலும்கூட, கடல் நீரே வற்றுமாறு சுற்றத்தினர் வந்தாலும், விருந்தோம்புதல் பண்பிலிருந்து விலகாமல் இன்முகத்துடன் பேசுவதே இல்வாழ்க்கைக்குச் சிறந்ததாகும் என்பதைப்

> "குடநீர் அட் டுண்ணும் இடுக்கண் பொழுதும்
> கடல்நீர் அறவுண் கேளிர் வரினும்
> ..... ........ (பா. எண். 382)

இப்பாடல் இயம்புகிறது.

### தந்தையின் ஆளுமை

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பதற்கிணங்க தந்தை தன் மகனை சான்றோனாக உயர்த்தும் பொருட்டு நன் முறையில் வளர்ப்பது அவனது கடமையாகும். தந்தைக்கு இருக்கக் கூடிய நல் அறிவினால் மட்டுமே, மகனுக்கும் நல்ல அறிவு உண்டாகும் என்கிறது நாலடியார் இதை,

> **"செந்நெல்லால் ஆய செழுமுளை மற்றும் அ**
> **..............................**
> **மகனறிவு தந்தை அறிவு"** (பா. எண். 367)

என்று குறிப்பிடுவதை,

என்று வள்ளுவர் குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது அது மட்டுமல்லாமல், இதற்கு முன் தோன்றிய சங்க இலக்கியங்களுள் ஒன்றான புறநானூற்றில் தந்தையின் கடமையை,

> **"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே**
> **சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே"**

என்று உரைத்திருப்பது சிந்தித்தற்குரியதாகும் எனனே தந்தையின் ஆளுமைப் பண்பு சிறந்த சான்றோனாக்குதல் என்பது தெளிவாகிறது.

### அறவினை ஆளுமை

மனிதனுக்கு இறப்பு எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம். நாம் செய்யக்கூடிய செயல்களை வைத்துத்தான் வாழும் காலம் நிச்சயிக்கப்படுகிறது. எனவே, அறச் செயல்களைச் செய்ய முற்படுபவர்கள், புல் நுனியில் இருக்கும் நீர்த்துளியைப் போல நிலையில்லாத தன்மையுடையது உடம்பு என எண்ணி இப்பொழுதே செய்க எனும் மனித ஆளுமையையும் நாலடியார் அறிவுறுத்துகிறது.

### பிறர்மனை நயவாமை

உலகிலேயே தமிழர்களின் பண்பாடு தான் தலைசிறந்த பண்பாடாகக் கருதப்படுகிறது. அப்படி பண்பாடு மிக்க சமுதாயத்தில் 'எயிட்ஸ்' என்ற

நோய் புகுந்திருப்பதும் பாலியல் வன்கொடுமைகள் நிகழ்ந்து வருவதும் வருந்துதற்குரியதோடு நாணம் கொள்ளத்தக்கதாகவும் இது கூடாது. காம மயக்கத்தால் பிறர் மனைவியரை விரும்பினால் நேரும் துன்பங்களைப் பற்றி கூறும் பொழுது. புண்ணியம், புகழ், தக்கோர் நட்பு, பெருமை போன்றவை மனைவியை விரும்பாதிடத்தில் வராமல் பகை, பழி, பாவம் ஆகிய இந்நான்கு துன்பங்கள் மட்டுமே வந்து சேரும் என்பதை,

"அறம்புகழ் கேண்மை பெருமை இந்நான்கும்
பிறன்தாரம் நச்சுவார் சேரா – பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவம் என்று
அச்சத்தோடு இந்நாற் பொருள்".

(பா. எண். 82)

இவ்வாறு எச்சரிக்கையூட்டுகிறது.

மேலும், ஒருவன் உயர்வதுமட், தாழ்வதும் அவனது செயல்கள் தான் காரணம் என்றும், ஒருவனுக்கு ஆசை ஏற்படும்போது தான் அதை அடைய வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது. அது நிறைவேறாத பொழுது தான் பொறாமையாக உருவெடுத்து கொலை கொள்ளை என்ற இழிவான செயல்களைச் செய்யத் தாண்டுகிறது. இதைத்தான் நாலடியார் 'ஆசை என்னும் மயக்கத்தை உடம்பின் அழுக்கு' என்கிறது. இவை போன்று இன்னும் எண்ணிலடங்கா வாழ்வியல் ஆளுமைகளை உள்ளடக்கிய பெட்டகமாக நாலடியார் திகழ்கிறது.

## தொகுப்புரை

நாலடியார் கூறும் வாழ்வியல் ஆளுமைகளைப் பின்பற்றினால் இன்றைய சமுதாயத்தில் நிலவி வரும் அமைதியின்மை எனும் நிலை மாறும்.

## துணை நின்ற நூல்கள

1. நாலடியார் – சாரதா பதிப்பகம், சென்னை.
2. புறநானூறு – நியு, செஞ்சுரி புக் ஹவுஸ்
3. முதுரை – பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், சாரதா பதிப்பகம், சென்னை.
4. திருக்குறள் – பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், சாரதா பதிப்பகம், சென்னை.
5. (https://ta.M.Wikipedia /org/v:)

□□□